# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.196 / 2016

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 19–11–2025.

பெயர் = சுந்தர்ராஜன் வா.சா.1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 ம்பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் எலக்ட்ரிசியன் வேலை பார்த்து வருகிறேன். நான் சென்னையில் வசித்து வருகிறேன். எத்தனை வருடமாக சென்னையில் வசிக்கிறேன் என்றால் 23 வருடமாக இருக்கிறேன். தாவாச்சொத்தை யார் அனுபவித்து வருகிறார் என்றால் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என சாட்சி கூறுகிறார். பொதுப்பாதையில் செப்டிக்டேங்க் கெட்டி அனுபவித்து வருவதாக சாட்சி கூறுகிறார். செப்டிக்டேங்க் கட்டியதை நான் கண்ணால் பார்த்தேனா என்றால் ஆமாம். சித்ரா என்பவர் யார் என்றால் என் உடன்பிறந்த சகோதரி. தாவாச்சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 67 A அல்லது 67B என எனக்கு சரியாக ஞாபகமில்லை. பிராதில் எந்த சர்வே எண்ணை கொடுத்துள்ளோம் என எனக்கு சரியாக ஞாபகமில்லை. பிராதில் கிழமேல், தென்வடல் எத்தனை அடி என குறிப்பிட்டுள்ளேனா என்றால் நீளம் 10 அடி அகலம் 5 அடி குறிப்பிட்டுள்ளதாக சாட்சி கூறுகிறார். மேற்படி விஸ்தீரணத்திற்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். 5 அடி அகலமுள்ள இடம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என எனக்கு ஞாபகமில்லை. பிராதில் எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 இலக்கச்சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன்.

(2) இரண்டாவது லக்கச்சொத்தின் அகலம் எனக்குத் தெரியாது. இரண்டாவது இலக்கச்சொத்து காலியிடமாக உள்ளதா கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா என்றால் எவ்வாறு உள்ளது என எனக்குத் தெரியாது. காலிமனையாக இருந்தது என மீண்டும் சாட்சி கூறுகிறார். இரண்டாவது இலக்கச்சொத்து எது என எனக்குத் தெரியாததால் அது காலிமனையாக உள்ளதா கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா என என்னால் கூற இயலாது என்றால் சரிதான். 2 வது இலக்கச்சொத்திற்கு பிராதில் சர்வே எண்

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 2வது இலக்கச்சொத்தைப் பொறுத்து என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் பொதுப்பாதையை ஆக்கிரமித்துள்ளதாக அகற்றக்கேட்டு பரிகாரம் கேட்டுள்ளேன் என சாட்சி கூறுகிறார். நான் கிரயம் வாங்கியுள்ளது கிழமேல் 37 அடி. ஆணையர் அறிக்கையின்படி கிழமேல் 36 அடி வீடுகட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் வீடுகட்டியுள்ள இடம் ஆதியில் பலிஜா கவுரவ நாயுடு சமூகத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான். 37 அடிக்கு கிழக்கே நடைபாதை என்று பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரோடு என காட்டப்பட்டுள்ளதா பாதை என காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் பொதுநடைபாதை என கிழக்குமாலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நடைபாதை என்றால் ஒரு ஆள் நடக்கும் அளவிற்கான பாதை என்றால் சரிதான். ஒரு நடைபாதைக்கு 3 அடி இருந்தால் போதுமானது என்றால் சரிதான். என்னுடைய பத்திரத்தில் நடைபாதையின் அளவு காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் எனக்குத் தெரியாது.

(3) வா.சா.ஆ.1 பத்திரத்தைப் படித்து பார்த்துவிட்டு அளவுகள் குறிப்பிடவில்லை என சாட்சி கூறுகிறார். பிரதிவாதிக்கு பாத்தியமான சொத்தின் பத்திரத்தை வா.சா.ஆ.14 ஆக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ல் உள்ள அளவுகள் சரியாக உள்ளது என்றால் தவறு. பிரதிவாதியின் பத்திரத்தில் கிழமேல் 60 அடி வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி வீடு உள்ள இடத்தை அவருடைய மனைவி பாக்கியவதியும் சேர்ந்து ரங்கசாமி என்பவரிடமிருந்து 28.04.1977 ல் கிரயம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். எங்களுடைய கிரயப்பத்திரத்தை காட்டிலும், பிரதிவாதியின் பத்திரம் தான் முந்தையது என்றால் சரியல்ல. நாங்கள் 2003ம் வருடம் கிரயம் வாங்கினோமா என்றால் என் அம்மா வாங்கினார். அந்த ஆவணம் வா.சா.ஆ.11 என்றால் சரிதான். அதற்கு முந்தைய பத்திரம் 2001ம் வருடத்திற்குரியது அது வா.சா.ஆ.12 என்றால் சரிதான். அதற்கு முந்தைய பத்திரம் 1998ம் வருடத்திற்குரியது அது வா.சா.ஆ.13 என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் 1998ம் வருட ஆவணம் தான் பழமையானது என்றால் சரிதான். மேற்படி 3 பத்திரங்களிலும் கிழக்கு நான்குமால் பொதுநடைபாதை என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அரசாங்க வரைபடத்தில் ரோடு உள்ளதாக சாட்சி தன்னிச்சையாக கூறுகிறார். மேற்படி வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வீட்டில் உள்ளது என சாட்சி கூறுகிறார்.

(4) அந்த வரைபடத்தில் எனக்கு பாதகமாக உள்ளதால்தான் அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கட்டியிருக்கும் வீடு அரசு புறம்போக்கு நிலத்தில் இருப்பதாக நோட்டீஸ் வந்துள்ளது என்றால் சரிதான். அதனை எதிர்த்து நான் அரசின்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் எண் தெரியுமா என்றால் தெரியாது. இந்த நீதிமன்றத்தில்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அந்த வழக்கில் நான் கட்டியுள்ள வீடு எத்தனை அடி ஆக்கிரமிப்பில் உள்ளதாக சொல்லியுள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது. என் வீடு ஆக்கிரமிப்பில் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வீடு கிழமேல் 52 அடி அவரது இடத்தில் கட்டியுள்ளார் என்றால் சரியாகத்தெரியவில்லை. பிரதிவாதியின் கட்டிடம் உள்ள பகுதி அவருடைய சொந்த இடம் என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்கு கிழக்கே தென்வடலாக தெரு உள்ளது என்றால் சரிதான். மேற்படி தெரு எனக்கு நினைவு தெரிந்ததில் இருந்து 50 வருடமாக உள்ளது என்றால் 20 வருடமாக உள்ளது என சாட்சி கூறுகிறார். தெருவிற்கு கிழக்கே உள்ள சுவரிலிருந்து ஆணையர் அளவீடு செய்தார் என்றால் பிரதிவாதியின் வீட்டிற்கு முன்பு காலி இடம் உள்ளது. மேற்படி காலியிடம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது.

(5) ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. பிரதிவாதி வீட்டின் கிழக்குச்சுவரிலிருந்து 60 அடி மேற்கே பாத்தியமுள்ளது என்றால் சரியல்ல. வீட்டிற்கு முன்பாக உள்ள காலி இடத்தையும் சேர்த்துதான் 60 அடி என சாட்சி கூறுகிறார். என் பிராதில் பிரதிவாதி வீட்டிற்கும் முன்பாக 10 அடி காலியிடம் உள்ளதாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிராதைப்படித்துபார்த்துவிட்டு அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரிதான் என சாட்சி கூறுகிறார். பிரதிவாதி அவருக்கு பாத்தியமான 60 அடி இடத்தில்தான் செப்டிக்டேங்க் கட்டியுள்ளார் என்றாலும், அதற்கு மேற்கே அவருக்கு சொந்தமான இடம் உள்ளது என்றாலும் சரியல்ல. 60 அடிக்கும் மேற்கே நடந்து செல்லும் அளவிற்கு பாதை உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வீடு சர்க்கார் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அரசின் மீது நான் தாக்கல் செய்துள்ள பிராதின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் ஆமாம்.

(6) என் மகன் வெளிநாட்டில் படித்துக்கொண்டு இருக்கிறார். எனக்கு பெண்பிள்ளைகள் கிடையாது. என் மகன் எனக்கு தானபத்திரம்

எழுதிக்கொடுத்தாரா என்றால் ஆமாம். வழக்கு நடத்துவதற்காக எழுதிக்கொடுத்தாரா என்றால் படிப்பதற்காக வெளிநாட்டிற்கு செல்வதால் எழுதிக்கொடுத்தார். வா.சா.ஆ.15 ஆவணத்தில் கிழக்கு நான்குமாலில் பொதுநடைபாதையாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ல் என் தங்கை சித்ரா சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். மற்றொரு சாட்சி பெயர் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.15 வழக்கு தாக்கல் செய்தபிறகு எழுதப்பட்டது என்றால் சரிதான். வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு பாத்தியமோ, அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருக்கு பாத்தியமான இடத்தில் தான் செப்டிக்டேங்க் கட்டியுள்ளார் அதற்கு மேற்கேயும் அவருக்கு இடம் உள்ளது என்றால் சரியல்ல. நான் நடைபாதையையும் சேர்த்து ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(7) தற்போதும் பூமியில் என் வீட்டிற்கும் கிழக்கே செப்டிக்டேங்கிற்கும் மேற்கே 4 அடி இடம் உள்ளது என்றால் சரிதான் அது என்னுடைய இடம் என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்து நீதிமன்ற ஆணையர் பார்வையிட வரும்போது இரண்டு முறையும் நான் ஊரில் இல்லை என்றால் சரிதான். என் மனைவி அரசு தேர்வுகள் துறையில் வேலை பார்த்து வந்தார். நானும், என் மனைவியும் ரொம்ப நாட்களாக பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்தோமா என்றால் சரியல்ல. என் மனைவிக்கு இவ்வழக்கு தாக்கல் செய்வதில் விருப்பமில்லை என்றாலும், நான் பொய்யான பவர் பத்திரத்தை தயார் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல, நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.11.19 17:45:54 +0530